காரைக்குடி நகராட்சி
24.08.2020 ம் தேதி நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்
தலைமை: திரு.க.ரெங்கராசு, ஆணையர்(பொ) மற்றும் தனிஅலுவலர்(பொ)
மன்றப் பொருட்கள்

| Date of meeting of the council | S.No. | Subject in the Agenda | Decision of the council |
| --- | --- | --- | --- |
| 24.08.2020 | 1 | **100.** காரைக்குடி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் குப்பை அள்ளும் TN63 AX 7205 எண்ணுள்ள வாகனத்திற்கு இன்ஸ்சூரன்ஸ் செலுத்தவேண்டி உள்ளதால் அதற்கான உத்தேச செலவினம் ரூ.50,000/– ஆகும். இதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>அ) அனுமதிக்கலாம்.<br>ஆ) பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2584/2020/எச்1) | **தீர்மான எண்.100**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| | 2 | **101.** காரைக்குடி நகராட்சி கோட்டையூர் நாட்டார் மனைப்பிரிவில் மனை எண்.10, டவுன் சர்வே எண்.511 / 1ஏ1, ஏபி, விஸ்தீரணம் 4429 ச.அடி உள்ள மனையிடத்தில் நகராட்சியால் பூஙகாவிற்காக சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி O.S.No.188-2005 மற்றும் AS 51/2011 ஆகிய வழக்குகளில் தீர்ப்பினை எதிர்த்து சென்னை உயர்நிதிமன்றம் மதுரைக்கிளையில் வழக்கு எண்.CMP (MD) No.7351-2019 in SA (SR) (MD)No.56799-2019 மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கூறிய வழக்கு 03.08.2020 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபொழுது இருதரப்பு வாதங்களையும் வைத்து தாமதமாக வழக்கு விவரஙகளை அறிந்துள்ளதாக தொகுத்து பிரதிவாதியின் வழக்கறிஞர் திரு.எஸ்.சீனிவாசராகவன் அவர்களுக்கு ரூ.25,000/–க்கான வஙகி வரைவோலையினை வழஙக வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். எனவே வழக்கறிஞர் திரு.எஸ்.சீனிவாசராகவன் அவர்களுக்கு ரூ.25,000/–ஐ வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு–**<br>அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்**கொ**ண்ட நடவடிக்கைகளுக்கு மன்றத் ஒப்புதல் வழஙகலாம்.<br>(ந.க.எண்.2192/2019/எப்2) | **தீர்மான எண்.101**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| | 3 | **102.** இந்நகராட்சிக்கு சொந்தமான பொறியியல் பிரிவு ஈப்பு வாகனம் எண். TN63 AV 5823 -க்கு புதிதாக டயர்கள் மாற்றும் பணிக்கு 14.08.2020 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் | **தீர்மான எண்.102**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | | கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br>1. மதுரை சுந்தர் டயர்ஸ் பிரைவேட் லிமிடெட், காரைக்குடி. - ரூ. 27,800/—<br>2. தேவி ஆட்டோ ஸ்பேர்ஸ், காரைக்குடி - ரூ.28,800/—<br>3. ஐயனார் டயர்அண்டு டிரேடர்ஸ், காரைக்குடி - ரூ.28,500/—<br>பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளியில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய மதுரை சுந்தர் டயர்ஸ் பிரைவேட் லிமிடெட்., காரைக்குடி, அவர்களின் விலைப்புள்ளியை ஏற்க அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:**<br>அ. குறைவான விலைப்புள்ளியை ஏற்கலாம்.<br>ஆ. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கைக்கு தொடர்ந்ததையும் அனுமதிக்கலாம். | |
| | 4 | **103.** இந்நகராட்சிக்கு சொந்தமான பொறியியல் பிரிவு ஈப்பு வாகனம் எண்.TN63 AV5823க்கு பழுது சரிசெய்திடும் பணிக்கு 14.08.2020 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br>1. ஸ்ரீ அம்மன் ஆட்டோ மொபைல்ஸ், காரைக்குடி - ரூ.19,100/-<br>2. ஸ்ரீ பாலாஜி ஆட்டோ மொபைல்ஸ், காரைக்குடி - ரூ.21,350/-<br>3. ஸ்ரீ சோலைராஜா ஆட்டோ கேரேஜ், காரைக்குடி - ரூ.23,650/-<br>**பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளியில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய** ஸ்ரீ அம்மன் ஆட்டோ மொபைல்ஸ், காரைக்குடி அவர்களின் விலைப்புள்ளியை ஏற்க அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:**<br>அ. குறைவான விலைப்புள்ளியை ஏற்கலாம்.<br>ஆ. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கைக்கு தொடர்ந்ததையும் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.103 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| | 5 | **104.** இந்நகராட்சி பகுதியில் பசுமடம் வீதியில் உள்ள நகர சிவன் கோவிலுக்கு சொந்தமான இடத்தில் நகராட்சியால் கட்டிடம் கட்டப்பட்டு இயங்கி வருகிறது. மேற்படி நகராட்சி பள்ளி கட்டப்பட்டுள்ள இடத்திற்கு மாத வாடகை தற்போது ரூ.500/— வீதம் செலுத்தப்பட்டு வருகிறது. 01.08.2020 முதல் மாத வாடகை ரூ.1000/— ஆக உயர்த்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.சி1/1938/2013) | **தீர்மான எண்.104 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்து** |

| | | | |
|---|---|---|---|
| | 6 | **105.** காரைக்குடி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் வாகனம் TN25 AQ 8404 எண்ணுள்ள காம்பேக்ட் லாரி 2019–2020 ஆண்டுக்கான வருடாந்திர தரச்சான்று (FC) கட்டணம் திரு.வி.இளையராஜா என்பவரால் கீழ்கண்டவாறு செலவிடப்பட்டது.<br>1) தாமத கட்டணம் – ரூ. 100<br>2) (FC) தரச்சான்றுகட்டணம் – ரூ. 850<br>3) புதிய வேகக்கட்டுபாட்டு கருவி வைத்தல் – ரூ. 2500<br>4) புகை சான்று கட்டணம் – ரூ. 300<br>மொத்தம் – ரூ. 3750/–<br>எனவே மேற்கண்ட தொகையை திரு.வி.இளையராஜா, ஓட்டுனர் என்பவருக்கு ரூ.3750/–ஐ வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>அ) அனுமதிக்கலாம்.<br>ஆ) பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2918/2020/எச்1) | **தீர்மான எண்.105**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| | 7 | **106.** காரைக்குடி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் வாகனம் TN63 T 2417 எண்ணுள்ள டிப்பர் லாரியின் இன்சூரன்ஸ் காலம் முடிவடைவதால் அவ்வண்டிக்கு இன்சூரன்ஸ் தொகை செலுத்த வேண்டியுள்ளதால் அதற்கான செலவினம் ரூ.32,070/– ஆகும். இதற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>அ) அனுமதிக்கலாம்.<br>ஆ) பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2304/2020/எச்1) | **தீர்மான எண்.106**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| | 8 | **107.** காரைக்குடி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் டாடா எசி வாகனஙகளுக்கு இன்சூரன்ஸ் காலம் முடிவடைவதால் கீழ்கண்டுள்ளவாறு | **தீர்மான எண்.107**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| வ.எண். | வாகனம் பெயர் / வாகன எண். | தொகை |
|---|---|---|
| 1 | TN63 BW 0202 | 19335 |
| 2 | TN63 BW 0204 | 19335 |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>3</td><td>TN63 BW 0243</td><td>19335</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td>58005</td></tr>
</table>
மேற்கண்டுள்ள வண்டிகளுக்கு இன்சூரன்ஸ் தொகை செலுத்தவேண்டி உள்ளதால் அதற்கான உத்தேச செலவினம் ரூ.58,005/– ஆகும். இதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு :</u><br>
அ) அனுமதிக்கலாம்.<br>
ஆ) பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2901/2020/எச்1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>9</td>
<td>
108. தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்தூர்க்கு, 2020–2021ம் ஆண்டிற்கு இந்நகராட்சி பங்கு தொகை ரூ.150000/–ஐ செலுத்தக்கோரி, கடிதம் எண்.276/2020/அ2 நாள்.18.08.2020ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் பேரில் மேற்படி பங்குத் தொகை ரூ.150000/– செலுத்துவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு:<br>
மன்றம் அனுமதிக்கலாம், நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ரூ.150000/– செலுத்த அனமதிக்கலாம்.
</td>
<td>தீர்மான எண்.108<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>10</td>
<td>
109. காரைக்குடி நகராட்சியில் தற்போது இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு.செ.நாகராஜன் வருவாய் உதவியாளராக பணிபுரிய அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளார். அன்னாரின் விண்ணப்பம் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு:<br>
1. இந்நகராட்சியில் வருவாய் உதவியாளராக பணிபுரிந்த திரு.எம்.மரியஜான் கென்னடி என்பவர் 29.02.2020ல் வயது முதிர்வின் காரணமாக பணி ஓய்வு பெற்றதால் வருவாய் உதவியாளர் பணியிடம் 01.03.2020 முதல் காலியாக உள்ளது.<br>
2. அன்னார் திரு.செ.நாகராஜன் இங்கு வருவதற்கு முன் மதுரை மாநகராட்சியில் வருவாய் உதவியாளராக பணிபுரிந்த அனுபவம் உள்ளார்.<br>
3. தமிழ்நாடு நகராட்சி பொதுப்பணி விதிகள் 2 மற்றும் அரசாணை (நிலை) எண்.222 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள்.30.09.1999ல் குறிப்பிட்டுள்ளபடி வருவாய் உதவியாளர் நிலை–1ம், இளநிலை உதவியாளர் பதவியும் ஒரே இனத்தில் (Inter changeable post) உள்ளதால், திரு.செ.நாகராஜன் இளநிலை உதவியாளரை காலியாக உள்ள வருவாய் உதவியாளர் நிலை–1ல் பணி மாற்றம் செய்ய அனுமதிக்கலாம்.
</td>
<td>தீர்மான எண்.109<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr><td></td><td></td><td></td><td></td></tr>
</table>

| | | காரைக்குடி நகராட்சி<br>31.08.2020 ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்<br>தலைமை: திரு.க.ரெங்கராசு, ஆணையர்(பொ) மற்றும் தனிஅலுவலர்(பொ)<br>மன்றப் பொருட்கள் | |
|---|---|---|---|
| Date of meeting of the council | S.No. | Subject in the Agenda | Decision of the council |
| 31.08.2020 | 1 | **110.** இந்நகராட்சி ஒப்பந்ததாரர்கள், பணியாளர்கள், குத்தகைதாரர்களிடம் பிடித்தம் செய்யும் வருமான வரியினை உரிய தலைப்பில் செலுத்தி காலாண்டுக்கு ஒருமுறை E-filling செய்ய வேண்டியுள்ளது. இப்பணியினை 10 ஆண்டுகளாக செவ்வனே செய்துவரும் திரு.டி.பரத்வாஜ் பட்டய கணக்கர் வசம் 2020–2021ம் நிதியாண்டிற்கு ஒப்படைக்கவும் அதற்குரிய கட்டணமாக காலாண்டிற்கு ரூ.3000/– வீதம் ஒப்பந்ததாரர்களுக்கு ஆண்டுக்கு ரூ.12000/– பணியாளர்களுக்கு ரூ.12000/– கத்தகைதாரர்களுக்கு ரூ.12000/– என வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>இதே போல GST க்கு மாதா மாதம் E-filling செய்ய வேண்டியுள்ளது. அதற்கு மாதம் ஒன்றக்கு ரூ.1750/– வீதம் ரூ.21000/– வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>திரு.டி.பரத்வாஜ் பட்டய கணக்கரிடம் மேற்படி பணியை ஒப்படைக்கவும் அதற்குரிய செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(ந.க.எண்.1626/2018/பி1) | **தீர்மான எண்.110<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது** |
| | 2 | **111.** காரைக்குடி நகராட்சிக்கு பாத்தியப்பட்ட முடியரசன் சாலையில் அமைந்துள்ள நவீன பூஙகாவில் தினசரி நுழைவுக் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தை 2018–2019ம் ஆண்டு முதல் 2020–2021 வரை மூன்றாண்டுகளுக்கு திரு.கே.சுந்தரபாண்டியன் என்பவர் குத்தகைக்கு எடுத்து நடத்தி வருகிறார். தற்போது 2020–2021ம் ஆண்டு மார்ச் முதல் “கொரோனா தொற்று” காரணத்தினால் தமிழக அரசால் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு பூஙகா மூடப்பட்டுள்ளது. மேற்கண்ட இனத்தை தொடர்ந்து நடத்த இயலாது என்பதால் குத்தகை உரிமத்தை நடப்பு ஆண்டிற்கு ரத்து செய்து தன்னுடைய முன்வைப்புத் தொகை ரூ.7,50,000/– வழஙகுமாறு விண்ணப்பம் கொடுத்துள்ளார். 2019–2020ம் ஆண்டிற்கான தணிக்கைக்கு உட்படுத்தி ரூ.7,00,000/– மட்டும் வழஙகவும், மீதித் தொகையை தணிக்கை முடிவுற்றபின் வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:**<br>மன்றம் அனுமதிக்கலாம் | **தீர்மான எண்.111<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | 3 | **112.** காரைக்குடி நகராட்சி பகுதியில் அருள்மிகு கொப்புடையம்மன் திருக்கோவிலுக்கு சொந்தமான 6.74 ஏக்கர் காலியிடம் (294141 சதுர அடி) அமைந்துள்ளது. அரசாணை நிலை எண்.151 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 20.08.2009–ன்படி மேற்படி காலியிடத்திற்கு வரி குறைவாக உள்ளதால் அரசாணையின்படி காலியிடவரி உரிய சதுரடியான 294141 சதுர அடிக்கு காலியிட வரி நிர்ணயம் செய்ததை எதிர்த்து நிர்வாக அலுவலர், கொப்புடையம்மன் கோவில் காரைக்குடி அவர்கள் நகராட்சியை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளையில் வழக்கு எண். (WP (MD)No 17050/2018 மூலம் வழக்கு தொடரப்பட்டு 05.08.2020ல் தீர்ப்புரை வழஙகப்பட்டுள்ளது. இத்தீர்ப்புரையை எதிர்த்து நிர்வாக அலுவலர், கொப்புடையம்மன் கோவில் காரைக்குடி அவர்களால் காரைக்குடி நகராட்சியை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளையில் மேல்முறையீடு வழக்கு எண். WA (MD)No 633/2020 மூலம் வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக திரு.பி.மகேந்திரன், வழக்கறிஞர் மூலம் ஆஜராகி நடத்தவும் வழக்கிற்கான மொத்த செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு.<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.7599/2017/அ4) | **தீர்மான எண்.112**<br>**அலுவலக குறிப்பு**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| | 4 | **113.** இந்நகராட்சி வருவாய் நிதி 2020–2021ன் கீழ் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சி பகுதியான பட்டுக்கோட்டையார் தெரு, கருணாநிதி நகர், சந்தன முத்துமாரியம்மன் தெரு, உதயம் நகர், எஸ்.வி.அமபலம் தெரு மற்றும் பள்ளிவாசல் போன்ற தெருக்களில் உள்ள மழைநீர் வடிகால் சுவர்களை உயர்த்துதல் மற்றும் சிறுபாலஙகள் அமைத்தல் பணிக்கு நகர்மன்றம் அனுமதி அளித்ததின் பேரில் 05.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.<br><br>**வ.எண்.** / **ஒப்பந்ததாரர் பெயர்** / **ஒப்பந்த சதவீதம்**<br>1 / திரு.டி.செந்தில்குமார், ஒப்பந்ததாரர், காரைக்குடி / மதிப்பீட்டைவிட 0.14% அதிகம்<br>2 / திரு.கே.சுந்தரபாண்டியன், ஒப்பந்ததாரர், காரைக்குடி / மதிப்பீட்டைவிட 2.25% அதிகம்<br><br>மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.டி.செந்தில்கமார், ஒப்பந்ததாரர் காரைக்குடி அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.14% குறைவாக உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மன்றத்தின அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு :<br>அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.113**<br>**அலுவலக குறிப்பு**<br>**அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr><td></td><td>5</td><td>114. இந்நகராட்சி வருவாய் நிதி 2020–2021ன் கீழ் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சி பகுதியான புதுச்சந்தை ரோடு, இராமசாமி தெரு, பனந்தோப்பு வெங்கிடாசலம் தெரு மற்றும் தெய்வராயன் தெருக்களில் உள்ள மழைநீர் வடிகால் சுவர்களை உயர்த்துதல் மற்றும் சிறுபாலங்கள் அமைத்தல் பணிக்கு நகர்மன்றம் அனுமதி அளித்ததின் பேரில் 05.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.
<table>
<tr><th>வ.எண்.</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.டி.செந்தில்குமார், ஒப்பந்ததாரர், காரைக்குடி</td><td>மதிப்பீட்டைவிட 0.11% அதிகம்</td></tr>
<tr><td>2</td><td>திரு.கே.சுந்தரபாண்டியன், ஒப்பந்ததாரர், காரைக்குடி</td><td>மதிப்பீட்டைவிட 2.10% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.டி.செந்தில்கமார், ஒப்பந்ததாரர் காரைக்குடி அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.11% குறைவாக உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மன்றத்தின அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு :<br>
அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்.114<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>6</td><td>115. இந்நகராட்சியில் உள்ள சாத்தப்பா பூங்கா வளாகத்தில் ஆணையாளர் மற்றும் பொறியாளர் குடியிருப்பு, இரண்டு மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் மற்றும் பொது சுகாதாரப் பரிவு வார்டு அலுவலகம் ஆகியவை அமைந்துள்ளன. மேலும், இவ்வளாகத்தில் நகராட்சி ஈப்புகள், குடிநீர் லாரி, காம்பாக்டர் வாகனங்கள், டிப்பர் லாரிகள், மினிலாரி வாகனங்கள் மற்றும் பேட்டரி வாகனங்கள் அனைத்தும் நிறுத்தப்பட்டு வருகின்றன. எனவே, இரவு நேரங்களில் மேற்கண்ட வாகனங்களின் பாதுகாப்பினை கருதியும் மற்றும் விடுமுறை மற்றும் பகல் நேரங்களில் வெளி நபர்கள் வளாகத்திற்குள் வருவதை கண்காணித்திட மேற்படி வளாகத்தின் நான்கு திசைகளிலும் CCTV கேமரா பொருத்துவதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.90,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு</u><br>
பொது நிதியின் கீழ் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்.115<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>7</td><td>116. காரைக்குடி நகராட்சியில் பொது சுகாதாரப் பணிகளின்கீழ் வீடுகள் தோறும் குப்பைகளை தரம் பிரித்து வாஙகுவதற்காக தூய்மை இந்தியா திட்டம் –2018–2019ன்கீழ் 54 பேட்டரி வாகனங்கள் (Battery Operated Vehicles ) வாஙகப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகின்றன. இவ்வாகனஙகளில் அவ்வப்போது ஏற்படும் சிறுசிறு பழுதுகள் நீக்குதல் மற்றும் தொடர் பராமரிப்பு ஆகியவை ஆண்டு பராமரிப்பு ( AMC ) முறையில் சரிசெய்யப்பட்டு இயக்கப்படுகின்றன. மேற்படி வாகனங்கள் வாஙகப்பட்டு 1½ வருடஙகளுக்கு மேல் ஆன நிலையில் தொடர்ந்து தினசரி பயன்பாட்டில் இருந்து வருவதால் வாகனஙகளில் உள்ள பிரதான உதிரிபாகஙகளான பேட்டரி, வயரிங கிட், மோட்டார் சம்மந்தப்பட்ட பாகஙகள், பிரேக், முகப்பு விளக்குகள் போன்ற பல்வேறு உதிரி பாகஙகள் அடிக்கடி பழுதடைந்து விடுவதால் வாகனஙகளை இயக்க முடியாத</td><td>தீர்மான எண்.‘116<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | நிலை ஏற்பட்டு, பொது சுகாதாரப் பணிகள் பாதிக்கப்படுகின்றன. மேற்கண்ட உதிரி பாகங்கள் பழுதடையும் நேரத்தில் உடனுக்குடன் புதிய பாகங்கள் மாற்றி அமைத்தால் வாகனங்களை தொடர்ந்து சீராக இயக்க இயலும். எனவே, தற்போதை தேவைக்கேற்ப மேற்கண்ட உதிரிபாகங்கள் வாஙகிட ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.9.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>பொது நிதியின் கீழ் அனுமதிக்கலாம். | |
| **8** | | **117.** தூய்மை பாரத இயக்கம் – திடக்கழிவு மேலாண்மை பணிகள்–2018–19ன் கீழ் இந்நகராட்சியில் முதல்நிலை சேகரப் பணிகளுக்காக பேட்டரியில் இயஙகும் வாகனஙகள் (Battery Operated Vehicle) 54 எண்ணம் வாஙகப்பட்டுள்ளன. மேற்கண்ட வாகனஙகள் மூலம் நகரில் உள்ள வீடுகளில் துப்புரவு பணியாளர்களால் தினசரி குப்பைகள் சேகரம் செய்யப்படுகின்றன. அவ்வாறு தினசரி இயக்கப்படும் வாகனஙகளில் கீழ்கண்ட பராமரிப்பு பணிகளை அன்றாடம் செய்யும் பட்சத்தில் வாகனஙகளை நீண்ட நாட்களுக்கு பயன்படுத்திட இயலும்.<br>1. தினசரி பேட்டரி சார்ஜ்ர் செக்கப் செய்தல்.<br>2. தினசரி டிஸ்டில்டு நீர் ஊற்றுதல்.<br>3. தினசரி அனைத்து வீல்களையும் செக்கப் செய்தல்.<br>4. தினசரி எலெக்ட்ரிக்கல் அயிட்டம் செக்கப் செய்தல்.<br>5. தினசரி மெயின்பிரேக் மற்றும் கைபிரேக் செக்கப் செய்தல்.<br>6. அவ்வப்போது பழுதாகும் சிறு உபகரணஙகளை மாற்றுதல்.<br>7. வாரம் ஒருமுறை வாகனத்தை கழுவி சுத்தம் செய்தல்.<br>மேற்கண்ட பணிகளை அன்றாடம் மேற்கொள்ள ஏதுவாக அனைத்து 54 வாகனஙகளையும் ஆண்டு பராமரிப்பு முறையின் (Annual Mainteannce Cost) கீழ் கடந்த அக்டோபர்–2019 முதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிக் காலம் 30.09.2020ல் முடிவடைவதால் தொடர்ந்து ஓராண்டிற்கு ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.9.20 இலட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:**<br>பொது நிதியின் கீழ் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.117**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| **9** | | **118.** இந்நகராட்சியில் உள்ள பட்டுக்கோட்டையார் தெரு, புதுசந்தை கிழக்கு மெயின் சாலை, மார்க்கண்டேயர் தெரு மற்றும் அரு.அ.வீதிகளில் மழைநீர் வடிகால் பக்க சுவர்களை உயர்த்தி அமைத்தல் மற்றும் சிறு பாலஙகள் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.4,50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>பொது நிதியின் கீழ் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.118**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | 10 | 119. காரைக்குடி நகராட்சியில் பழைய பேருந்து நிலையம் முதல் செக்காலை கல்லூரி சாலை சந்திப்பு மற்றும் கல்லூரி சாலை ஆகிய இரண்டு சாலைகளும் நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ள பிரதான சாலைகளாக உள்ளன. இந்த சாலைகளில் நகரின் முக்கிய வணிக நிறுவனங்கள், அலுவலகங்கள், கல்லூரி, பல்கலைக்கழக வளாகம் ஆகியவை அமைந்துள்ளன. மேற்படி சாலைகளில் மொத்தம் 76 தெருவிளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் 34 தெரு விளக்குகள் சோடியம் விளக்குகளாகவும் மற்றும் 42 தெருவிளக்குகள் சாதாரண 40 வாட்ஸ் குழல் விளக்குகளாகவும் உள்ளன. வாகனப் போக்குவரத்து மற்றும் மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள சாலைகள் என்பதால் 40 வாட்ஸ் குழல் விளக்குகளின் வெளிச்சம் போதுமான அளவில் இல்லாமல் உள்ளது. அதனால் மேற்படி விளக்குகள் அமைந்துள்ள பகுதி இருள்சூழ்ந்து காணப்படுகிறது. எனவே, மேற்படி இரண்டு சாலைகளும் நகரின் மையப் பகுதியில் உள்ள பிரதான சாலையாக இருப்பதால் மேற்படி 42 எண்ணம் 40 வாட்ஸ் குழல் விளக்குகளை மாற்றி புதிதாக 120 வாட்ஸ் எல்.இ.டி.விளக்குகள் வாங்கி பொருத்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.6.00 இலட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>பொது நிதியின் கீழ் அனுமதிக்கலாம். | தீர்மான எண்.119<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது |
| | 11 | 120. இந்நகராட்சியில் உள்ள ஆசாத் தெரு மற்றும் தியாகராஜன் செட்டியார் தெரு 4 இடங்களில் சிறு பாலங்கள் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.4,70,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>பொது நிதியின் கீழ் அனுமதிக்கலாம். | தீர்மான எண்.120<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது |
| | 12 | 121. காரைக்குடி நகராட்சியில் அம்ருத் திட்டத்தின் கீழ் 10 புதிய பூங்காக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், கடந்த ஆண்டுகளில் முடியரசன் சாலை பூங்கா, அருணா பூங்கா மற்றும் சுப்பிரமணியபுரம் பூங்கா ஆகிய பூங்காக்கள் உருவாக்கப்பட்டு நகராட்சி பராமரிப்பில் உள்ளன. மேற்படி பூங்கா அனைத்தும் நகராட்சி தூய்மைப் பணியாளர்களைக் கொண்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேற்படி பூங்காக்களில் உள்ள செடிகளை ஒழுங்குப்படுத்தி வெட்டவும் மற்றும் அவ்வப்போது முளைத்திடும் தேவையற்ற செடிகள் மற்றும் முட்புதர்களை வெட்டி சுத்தம் செய்யவும் தேவைப்படும் Brushcutter இயந்திரம் இரண்டு வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.70000/–க்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>பொது நிதியின் கீழ் அனுமதிக்கலாம். | தீர்மான எண்.121<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது |
| | 13 | 122. காரைக்குடி நகராட்சி இராஜாஜி பேருந்து நிலையம் கிழக்கு பகுதி கடை எண்.11 வரிவிதிப்பு எண்.144ஐ தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிட். மாத வாடகைக்கு நேரக்காப்பாளர் அலுவலகம் இயங்கி வந்ததை காலி செய்து 31.07.2020 நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டது. கடைக்குரிய வாடகை நிலுவையினை விரைவில் செலுத்தக் கோரி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. வருவாய் ஆய்வர் தெற்கு மேற்படி கடையின் சாவியினை பெற்று அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார். எனவே, மேற்படி கடை எண்.11ன் குத்தகை உரிமத்தினை ரத்து செய்தும், மேற்படி கடையை மறு ஏலம் விடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | தீர்மான எண்.122<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | அலுவலகக்குறிப்பு:<br>1. மேற்படி கடையின் குத்தகை உரிமத்தினை 31.07.2020ம் தேதியுடன் ரத்து செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி கடையினை மறு ஏலம் விடவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2769/2020/அ1) | |
| | 14 | 123. இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்துநிலையம் வரிவிதிப்பு எண்.182ல் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் லிட் நேரக்காப்பாளர் அறை பயன்பாட்டில் இருந்தது. மேற்படி நிறுவனம் நீண்ட காலமாக வாடகை செலுத்தாமல் இருந்து வந்ததால் அலுவலகத்தை பூட்டி சீல் வைக்கப்பட்டது. அதனை தொடர்ந்து பேருந்து நிலையத்திற்குள் வரும் பேருந்துகளுக்கு செலுத்த வேண்டிய நுழைவுக் கட்டணத்தை தர மறுத்தனர். பேருந்து நிலையங்களில் நுழைவுக் கட்டணம் வசூல் உரிமம் பெற்ற குத்தகைதாரர் திரு.வி.துரைமுருகன் தனக்கு நஷ்டம் ஏற்படுகிறது என சுட்டிக்காட்டி சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் WP(MD)No.4813 of 2019 வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் திரு.பி.மகேசுந்திரன் உயர்நீதிமன்ற வழக்கறிஞர் ஆஜராகி வழக்கு நடத்தியமைக்கு ரூ.7500/— வழக்கறிஞர் கட்டணம் கோரியுள்ளார். அன்னாருக்கு வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.4631/2018/அ1) | தீர்மான எண்.123<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது |
| | 15 | 124. இந்நகராட்சியில் சாத்தப்பா பூஙகா வாளகத்தில் அமைந்துள்ள நகராட்சி பொறியாளர் குடியிருப்பின் முன்புறம் மழைநீர் நேரிடையாக வீட்டின் முகப்பில் பட்டு உட்புகாத வகையில் போர்டிகோ அமைத்திடவும் மற்றும் ஆணையாளர், பொறியாளர் குடியிருப்புகளுக்கு இடையில் காம்பவுண்டு சுவர் அமைத்திடவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.7.00 இலட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>பொது நிதியின் கீழ் அனுமதிக்கலாம். | தீர்மான எண்.124<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது |
| | 16 | 125. இந்நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள பொறியியல் பிரிவில் உதவிப்பொறியாளர் அறைக்கு தடுப்பு அமைத்திடவும், பிரிவு அலுவலர்களுக்கு கழிப்பிடம் அமைத்திடவும் மற்றும் அலுவலக பிரதான கட்டித்தின் வெளிப்புறம் வர்ணம் பூசி மராமத்துப் பணி செய்திடவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.6.00 இலட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>பொது நிதியின் கீழ் அனுமதிக்கலாம். | தீர்மான எண்.125<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது |
| | 17 | 126. இந்நகராட்சியில் உள்ள இராமநாதன் செட்டியார் நகராட்சி உயர்நிலைப் பள்ளியில் ஒவ்வொரு ஆண்டும் | தீர்மான எண்.126<br>அலுவலக குறிப்பு |

| | | | |
|---|---|---|---|
| | | மாணவர் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதால் தற்போதுள்ள வகுப்பறை கட்டிடங்கள் போதுமானதாக இல்லை எனவும், கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் கட்டித் தருமாறும் முதன்மைக் கல்வி அலுவலர், சிவகங்கை அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், நகராட்சி ஆணையர் அவர்களுக்கும் கடிதம் கொடுத்துள்ளார். அதனை தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் உடனடியாக மேற்படி பள்ளி வளாகத்தில் கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்டிட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுரை வழங்கியுள்ளார். அதன்பேரில், மேற்படி பள்ளி வளாகத்தில் கிழக்கு பக்கம் உள்ள தார்சு கட்டிடத்தின் முதல் தளத்தில் 6 வகுப்பறைகள் கொண்ட கட்டிடம் கட்டுவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.24.00 இலட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>கல்வி நிதியின் கீழ் அனுமதிக்கலாம். | **அனுமதிக்கப்பட்டது** |
| | 18 | **127.** அரசாணை நிலை எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ME4) நாள் 03.07.2007ன்படி இந்நகராட்சிக்கு சொந்தமான கடைகளை 9 வருட காலத்திற்கு 3 தொகுப்புகளாக குத்தகைக்கு விட திருத்திய நடைமுறைகள் ஆணைகள் வெளியிடப்பட்டது. அதன்பேரில் நகராட்சிக்கு சொந்தமான கடைகள் 01.07.2007 முதல் 9 ஆண்டுகளுக்கு 3 தொகுப்புகளாக கடைகள் குத்தகைக்கு விடப்பட்டது. கீழ்க்கண்டவாறு உள்ள கடைகள் அனைத்தும் 9 வருட குத்தகை காலம் முடிவடைகிறது. வாடகை மறு நிர்ணயம் செய்ய பட்டியல் தயார் செய்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் ஒப்புதல் பெற இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.4558/2018/அ1 நாள் 15.10.2019 மூலம் பிரேரணை அனுப்பப்பட்டது. உரிய உத்தரவு கிடைக்கும் வரை நகராட்சியின் நிதியிழப்பினை கருத்தில் கொண்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் தலைமையிலான கண்காணிப்பு குழுவினால் மேற்படி கடைகளின் வாடகை மறு நிர்ணயத்திற்கு உட்பட்டு தற்காலிகமாக தற்போதைய வாடகையில் இருந்து 15 சதவீதம் உயர்வு செய்து வாடகை நிர்ணயம் செய்யவும், கணிணியில் கேட்பு எழுப்பிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | **தீர்மான எண்.127**<br>**அலுவலக குறிப்பு**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| வ. எண் | குத்தகைதாரர் பெயர் (திருவாளர்கள்) | கடையின் விபரம் | வரி விதிப்பு எண் | தற் போதைய வாடகை | 15% உயர்வு செய்யப் பட்ட வாடகை | உயர்வு செய்யப் பட வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | எம்.நூர்முகமது | கல்லுக்கட்டி வடக்கு | 242 | 3571 | 4107 | 01.09.2018 முதல் நாளது தேதி வரை |
| 2 | எம்.நூர்முகமது | இராஜாஜி பேருந்து நிலையம் | 243 | 892 | 1026 | 01.09.2018 முதல் நாளது தேதி வரை |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | பழைய ஆனந்த் ஹோட்டல் கடை எண்.6 | | | | | | |
| | | 3 | ஆர்.ராமகிருஷ்ணன் | அண்ணா மார்க்கெட் கடை எண்.3 | 244 | 894 | 1028 | 01.04.2019 முதல் நாளது தேதி வரை | | |
| | | 4 | ஆர்.ராமகிருஷ்ணன் | அண்ணா மார்க்கெட் கடை எண்.4 | 245 | 794 | 913 | 01.04.2019 முதல் நாளது தேதி வரை | | |
| | | 5 | ஆர்.முருகேசன் | அண்ணா மார்க்கெட் கடை எண்.6 | 246 | 754 | 867 | 01.04.2019 முதல் நாளது தேதி வரை | | |
| | | 6 | ஒய்.தைனீஸ் செபஸ்தியான் | அண்ணா மார்க்கெட் கடை எண்.7 | 247 | 887 | 1020 | 01.04.2019 முதல் நாளது தேதி வரை | | |
| | | 7 | எஸ்.கணேசன் | அண்ணா மார்க்கெட் கடை எண்.8 | 248 | 860 | 989 | 01.04.2019 முதல் நாளது தேதி வரை | | |
| | | 8 | ஒய்.தைனீஸ் செபஸ்தியான் | அண்ணா மார்க்கெட் கடை எண்.37 | 249 | 649 | 746 | 01.04.2019 முதல் நாளது தேதி வரை | | |
| | | 9 | ஆர்.முருகேசன் | அண்ணா மார்க்கெட் கடை எண்.40 | 250 | 741 | 852 | 11.02.2019 முதல் நாளது தேதி வரை | | |
| | | 10 | ஆர்.முருகேசன் | அண்ணா மார்க்கெட் கடை எண்.42 | 251 | 820 | 943 | 11.02.2019 முதல் நாளது தேதி வரை | | |
| | | 11 | டி.மாரிமுத்து | சுப்பிரமணியபுரம் கடை எண்.14 | 252 | 887 | 1020 | 01.04.2019 முதல் நாளது தேதி வரை | | |
| | | 12 | ஆர்.முருகேசன் | அண்ணா மார்க்கெட் | 253 | 661 | 760 | 11.02.2019 முதல் நாளது தேதி வரை | | |

<table>
<tr><td></td><td></td><td>
<table>
<tr><td></td><td></td><td>கடை எண்.3</td><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td>13</td><td>பி.பலராமன்</td><td>சுப்பிரமணிய புரம் கடை எண்.18</td><td>254</td><td>596</td><td>685</td><td>01.04.2019 முதல் நாளது தேதி வரை</td></tr>
<tr><td>14</td><td>எம்.ரமேஷ்</td><td>இராஜாஜி பேருந்து நிலையம் கிழக்கு பகுதி கடை எண்.8</td><td>255</td><td>690</td><td>793</td><td>01.04.2019 முதல் நாளது தேதி வரை</td></tr>
<tr><td>15</td><td>எஸ்.மேரிநிர்மலா</td><td>சுப்பிரமணிய புரம் கடை எண்.22</td><td>256</td><td>661</td><td>760</td><td>19.03.2019 முதல் நாளது தேதி வரை</td></tr>
<tr><td>16</td><td>ஆர்.சங்கர்</td><td>செக்காலை ரோடு கடை எண்.3</td><td>3</td><td>926</td><td>1065</td><td>15.06.2019 முதல் நாளது தேதி வரை</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு:<br>
மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.4558/2018/அ1)
</td><td></td></tr>
<tr><td></td><td>19</td><td>128. காரைக்குடி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் JCB வாகனம் TN63 Y 4119ல் 2019க்கு பிறகு ஆயில் சர்வீஸ் செய்யவும், இஞ்சின் ஆயில், இஞ்சின் பில்டர், டீசல் பில்ட்டர், வால்டோர், பேக்கிங், பீத்தர் வேலைகள் பார்க்கவும் உத்தேச செலவீனம் ரூ.20,000/-க்கு நகர்மன்ற தீர்மானம் எண்.81, நாள் 31.07.2020ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்பேரில் மேற்கண்ட பணியினை அங்கீகாரம் பெற்ற நிறுவனமான ஜெயராஜ் ஆட்டோ மொபைல்ஸ் ஏஜென்ஸி, காரைக்குடி நிறுவனம் மூலம் செய்திட அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு:<br>
1) அனுமதிக்கலாம்.<br>
2) பொது சுகாதாரம் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்.128<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>20</td><td>129. இந்நகராட்சி வருவாய் நிதி 2020-2021ன் கீழ் ரூ.4.70 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சி பகுதியான ஆசாத் தெரு மற்றும் தியாகராஜன் செட்டியார் தெருக்களில் சிறு பாலங்கள் அமைக்கும் பணிக்கு நகர்மன்றம் அனுமதி அளித்ததின் பேரில் 31.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல்</td><td>தீர்மான எண்.129<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>பின்வருமாறு.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.டி.செந்தில்குமார், ஒப்பந்ததாரர், காரைக்குடி</td><td>மதிப்பீட்டை விட 0.11% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.கே.சுந்தரபாண்டியன், ஒப்பந்ததாரர், காரைக்குடி.</td><td>மதிப்பீட்டை விட 2.55% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.டி.செந்தில்குமார், ஒப்பந்ததாரர், காரைக்குடி அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.11% குறைவாக உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு:<br>
அனுமதிக்கலாம்.</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>21</td>
<td>130. இந்நகராட்சி வருவாய் நிதி 2020-2021ன் கீழ் ரூ.4.50 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சி பகுதியில் உள்ள பட்டுக்கோட்டையார் தெரு, புதுச்சந்தை கிழக்கு மெயின் சாலை, மார்க்கண்டேயர் தெரு மற்றும் அரு.அ.வீதியில் மழைநீர் வடிகால் சுவர்கள் உயர்த்தி, சிறுபாலங்கள் அமைக்கும் பணிக்கு நகர்மன்றம் அனுமதி அளித்ததின் பேரில் 31.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.டி.செந்தில்குமார், ஒப்பந்ததாரர், காரைக்குடி</td><td>மதிப்பீட்டை விட 0.13% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.கே.சுந்தரபாண்டியன்,ஒப்பந்ததாரர், காரைக்குடி.</td><td>மதிப்பீட்டை விட 2.15% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.டி.செந்தில்குமார், ஒப்பந்ததாரர், காரைக்குடி அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.13% குறைவாக உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு:<br>
அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்.130<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

ஆணையர்(பொ)
காரைக்குடி நகராட்சி